**20.06.2024**

**அ.வ.எண். 274/ 2012**

**வா.சா.1 பாஸ்கரன் அவர்களின் குறுக்கு விசாரணை**

1. நான் 08.06.2009 அன்று ஆவண எண் 2858/2009 முன்னிலைக்கு தாவா சொத்தை கிரயம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரிதான். சாமிதாஸ் என்பவருக்கும் தாவா சொத்துக்கும் எவ்வாறு சம்பந்தம் உண்டு என்றால் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்துவின் மகன் தான் சாமிதாஸ். தாவா சொத்தின் ஆவணங்கள் அனைத்தும் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து பெயரில் இல்லாமல் ஞானகண்ணு பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது செல்லமுத்து மகன் ஞானகண்ணு. செல்லமுத்து மகன் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து என்ற பெயரில் பதிவாகியுள்ள பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. செல்லமுத்து மகன் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து என்ற பெயரில் பட்டா ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. செல்லமுத்து மகன் ஞானகண்ணு பெயரிலிருந்து வா.சா.ஆ.8 ல் குறிப்பிட்டுள்ள நபர்களின் பெயர்களில் பட்டா மாற்றப்பட்டது. செல்லமுத்து மற்றும் செல்லமுத்துவின் மகன் ஞானகண்ணு எந்த காலத்திலாவது தாவா கிராமத்தில் வசித்து வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எனது கிரையதாரர்கள் யாரும் தாவா கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. வசித்து வந்தார்கள். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை அவர்கள் தாவா கிராமத்தில் வசித்து வந்தார்கள் என்றால் எனக்கு

தெரியாது. ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து மற்றும் அவரது தகப்பனார் செல்லமுத்து ஆகியோர்கள் தாவா கிராமத்தில் வசித்து வந்தார்கள் என்று காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எனது கிரையதாரர்கள் தாவா கிராமத்தில் வசித்து வந்தார்கள் என்று காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் எனது கிரையதாரர்களின் முகவரி சென்னை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்துவின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன். ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து 1965 ம் வருடம் இறந்தார். செல்லமுத்து மகன் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்துவிற்கும் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் ஆன மத்தேயூ மகன் ஞானகண்ணுவிற்கும் சம்பந்தமில்லை என்றால் மத்தேயூ மகன் ஞானகண்ணுவிற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை.

4. ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து 1965 ம் வருடம் இறந்திருந்தால் அவர் பெயரில் பட்டா வழங்கியிருக்க முடியாது என்றால் சரியல்ல. ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து எந்த காலத்திலும் மாத்தூர் கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் அங்கு வசித்தால்தான் பட்டா வழங்கினார்கள். ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்துவின் அடையாள அட்டை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. வா.சா.ஆ.5ல் பிரதிவாதியின் கிரையதாரர் பெயர் மத்தேயூ மகன் ஞானகண்ணு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மத்தேயூ மகன் ஞானகண்ணுவின் முகவரி மாத்தூர் கிராமம் என்று வா.சா.ஆ.5ல் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 பட்டா நான் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர்தான் வழங்கினார்.

5. பிரதிவாதியின் கிரையதாரர் மகன் தாவீது என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கீழ் தகவல் கோரியதில் 2013ம் வருடம் வரை தாவா சொத்திற்கான பட்டா ஞானகண்ணு பெயரில் இருந்ததது என்று தகவல் அளிக்கப்பட்டது என்றால் அது மத்தேயூ மகன் ஞானகண்ணு இல்லை. 2013ம் வருடம் வரை ஞானகண்ணு பெயரில் பட்டா இருக்கும்போது 2009ம் வருடம் நான் கிரையம் வாங்கிய காலத்தில் எனது கிரையதாரார் பெயரில் வா.சா.ஆ.2 பட்டா எப்படி வந்தது என்றால் 2008ம் வருடம் வரை செல்லமுத்து மகன் ஞானகண்ணு பெயரில் பட்டா இருந்தது. 2009ம் வருடம் எனது கிரையதாரர் பெயரில் பட்டா மாற்றி எனக்கு கிரையம் கொடுத்தார்கள். யார் பட்டா மாற்றியது என்றால் எனது கிரையதாரர்கள் தாசில்தார் மூலம் பட்டா மாற்றினார்கள். தாசில்தாரரை விசாரணை செய்தால் வா.சா.ஆ.2 உண்மையா அல்லது 2013ம் வருடம் வரை ஞானகண்ணு பெயரில் பட்டா இருந்தது என்ற விவரம் உண்மையா என்று தெரியவரும் என்றால் சரிதான்.

6. தாவா சொத்துக்கு ஆதியில் வழங்கிய பட்டாவிலும் மற்ற

ஆவணங்களிலும் ஞானகண்ணு என்றுதான் குறிப்பிட்டுள்ளது என்றாலும் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து என்று குறிப்பிடவில்லை என்றாலும் அது செல்லமுத்து மகன் ஞானகண்ணு தான் மத்தேயூ மகன் ஞானகண்ணு இல்லை. எனது கிரையதாரர்களின் தகப்பனரான சாமிதாஸின் தகப்பனார் பெயர் எந்த காலத்திலும் ஞானகண்ணு இல்லை என்றாலும் அவரது பெயர் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்துதான் என்றாலும் சரியல்ல. ஞானகண்ணு என்ற பெயரை தவறாக பயன்படுத்தி ஆள்மாறாட்டம் செய்த செல்லமுத்து மகன் ஞானகண்ணு பெயரில் பட்டா மாற்றி அதன்பிறகு அவரது மகன் சாமிதாஸ் பெயரில் தவறாக பட்டா மாற்றியுள்ளதால் அந்த பட்டா அனைத்தும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

7. இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகும் 2013ம் வருடம் வரை ஞானகண்ணு பெயரில்தான் தாவா சொத்திற்கான பட்டா இருந்தது என்றாலும் எனவே சாமிதாஸ் வகையறா பெயரில் 2009ம் வருடம் வழங்கபட்டதாக நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.14 ஐ ஊர்ஜிதம் செய்வதற்கு அடங்கல் எதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.14 தவறான பட்டா என்றாலும் அதற்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது கிரையபத்திரத்தில் தாவா சொத்து ஆதியில் ஞானகண்ணு என்பவருக்கு உரிமையானது என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். எனது கிரையதாரர்களுக்கு தாவா

சொத்து பூர்வீகமாக கிடைக்கப்பெற்றது என்று எனது கிரையபத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஞானகண்ணுவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அவைகளின் நகல்களை தாக்கல் செய்யவில்லை. ஞானகண்ணு மகன் சாமிதாஸ் என்று காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞானகண்ணு என்கின்ற ஞானமுத்து மகன் சாமிதாஸ் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

8. ஞானகண்ணு இறந்தபிறகு சாமிதாஸ் பெயரில் பட்டா மாறியதா என்றால் இல்லை. செல்லமுத்து மகன் ஞானகண்ணுவிற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளரான மத்தேயூ மகன் ஞானகண்ணு வெளியூரில் வசித்து வந்ததாலும் வருவாய் ஆவணங்களில் தகப்பனார் பெயர் குறிப்பிடாத காரணத்தால் அதை பயன்படுத்தி தவறாக பட்டா மாற்றியுள்ளார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் நான் தாவா சொத்திற்கு உரிமை கோரமுடியாது என்றாலும் சரியல்ல. செல்லமுத்து மகன் ஞானகண்ணு வெளியூரில் வசித்து வந்ததை பயன்படுத்தி அவர்கள்தான் தவறாக பட்டா மாற்றியுள்ளார்கள்.

9. தாவா சொத்திற்கான பட்டா பாஸ்புக் 1982ம் வருடம்தான் வழங்கப்பட்டது என்றாலும் நான் சொல்கின்ற செல்லமுத்து மகன் ஞானகண்ணு 1965ம் வருடம் இறந்துவிட்டதால் பட்டா வழங்கிய காலத்தில் அவர் உயிருடன் இல்லாததால் அவர் பெயரில் பட்டா வழங்கியிருக்க

முடியாது என்றாலும் சரியல்ல. நான் சொல்கின்ற செல்லமுத்து மகன் ஞானகண்ணு எனது கிரையதாரருக்கு 3 தலைமுறைக்கு முன்பு இருந்த நபர் என்றாலும் பிரதிவாதிகளின் கிரையதாரர் 2010ம் வருடம் வா.சா.ஆ.5 எழுதியபின்பு 2011ம் வருடம் இறந்துவிட்டார் என்றாலும் அப்போது அவர் வயது 85 என்றாலும் சரியல்ல. அது தவறான பட்டா நான் 2009ம் வருடம் கிரையம் வாங்கிய பின்புதான் 2010 ம் வருடம் அவர்கள் கிரையம் வாங்கினார்கள்.

**10**. பிரதிவாதிகளின் கிரையதாரரான மாத்தூர் கிராமத்தில் பிறந்து வளர்நத மத்தேயூ மகன் ஞானகண்ணு தான் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் என்றால் சரியல்ல. எனவே தான் என்னால் அசல் பட்டாவினை தாக்கல் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. நகல் தாக்கல் செய்துள்ளேன். எனவே உண்மையான உரிமையாளர் மத்தேயூ மகன் ஞானகண்ணு எழுதிகொடுத்த வா.சா.ஆ.5 மட்டும்தான் செல்லதக்கது என்றால் சரியல்ல. எனது கிரையதாரர்களுக்கும் தாவா சொத்துக்கும் சம்பந்தம் இல்லாததால் அவர்கள் எழுதிகொடுத்த வா.சா.ஆ.4 செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.4 செல்லதக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரிய பிரதிவாதிகளின் எதிரிடை கோரிக்கை அனுமதிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகளின் எதிரிடை கோரிக்கை செலவுதொகையுடன் அனுமதிக்கபடவேண்டும் என்றாலும் நான் தாக்கல் செய்த அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.